Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A.
MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (4—4—50) வெளியீடு (5—4—50) [இதழ் 214

சேரிகள் நிலை கண்டு வெட்கப்பட வேண்டாமா

நாகரிக சர்க்கார்?

ஆளத் தெரிந்தால் ஆளட்டும்; இன்றேல்....!

வீண் செலவுக்குப் பணமிருக்கிறது; வேதனையை நீக்கப் பணமில்லையா?

(0)

கையாலாகாவிடில் சொல்லட்டும், ஐம்பது லட்சம் திரட்டுகிறோம்

(0)

சேரிவாழ்வோர் மாநாட்டில் அண்ணாத்துரை

சென்னை பீபிள்ஸ் பார்க் மைதானத்தில் ஞாயிறன்று மாலை நடந்த சேரிவாழ்வோர் மாநாட்டில் தோழர் சி. என். அண்ணாதுரை ஆற்றிய சொற்பொழிவாவது:—

தலைவர் அவர்களே!
தோழர்களே!!

சேரிவாழ்வோர் குறைபாடுகளை எடுத்துக்கூறவும், அவைகளைத் தீர்க்க சர்க்காரை வற்புறுத்தவும் இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது. இப்படிக் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்க்கப் பல கட்சிகள் ஒன்று சேர்வது வரவேற்கத்தக்கது. அரசியல் கட்சிகளுக்கு மாறுபட்ட திட்டங்கள் இருந்தாலும், எல்லோரும் சேர்ந்து கவனிக்கப்படவேண்டியது சேரிவாழ்வோர் பிரச்சினையாகும். அதனால்தான் நாம் எல்லோரும் ஒன்றுகூடியுள்ளோம். ஒன்று கூடியிருக்கிறோமே, ஏகோபித்து வேலை செய்யவேண்டுமென்று நம் மனதில் ஒரு ஆசை. ஆனால் அது சர்க்காருக்கு அச்சத்தைக் கொடுக்கும். அரசாங்கம் கைப்பற்றப்பட வேண்டுமென்று தோழர் சிவசாமி கூறினார். மாற்றுக் கட்சியினர் ஒன்று சேருகிறார்களே என்பதைப் பற்றி ஆலோசிக்க ரகசியமாகக் கூடிய அரசியலாருக்கு இது கிலி தரக்கூடும். அரசியலார் அச்சத்தைத் தீர்த்துக் கொள்ளட்டும்; சஞ்சலப்பட வேண்டாம், சங்கடப்பட வேண்டும்; அதிகாரத்தைக் கைப்பற்ற நாங்கள் முற்பட்டுப் போவதில்லை. அப்படி இடது சாரியினர் அரசாங்கம் அமைக்கும்படி ஏற்பட்டாலும் தோழர் அந்தோணிப் பிள்ளையைத்தான் முதலமைச்சராக இருக்கும்படி கேட்டுக்கொள்வேன். திராவிட இயக்கத்தின் சார்பில் கூறுகிறேன், இப்பொழுது எங்களுக்குப் பதவி ஏற்றுக்கொள்ளும் ஆசை இல்லையென்று. திராவிட இயக்கம் என்று ஏன் கூறுகிறேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், திராவிட கழகத்துக்கும் இரண்டுக்கும் நான் இங்கு பிரதிநிதி என்று கருதுவதால்தான்.

வெட்கப்பட வேண்டும்

சேரிகள் சீர்திருத்தத்திற்காக ஒரு மாநாடு கூடுகிறதென்று சொன்னால், உண்மையிலேயே நாகரீக சர்க்கார் வெட்கப்படவேண்டும். மந்திரிமாருக்குப் பறந்துசெல்ல விமானம், உல்லாசமாக வாழ்க்கை நடத்த மாளிகைகள்; ஆனால்சேரிகளில்தூர்நாற்றம், குடிக்கத் தண்ணீர் இல்லை; மலஜலம் கழிக்கக்கூட இடம் இல்லை; ஓயாமல் சேரி மக்கள் பிரயத்தனப்படுகிறார்கள். முடிந்தால் அரசாங்கத்தை நடத்தட்டும், இல்லாவிட்டால் நான் நிச்சயமாகக் கூறுகிறேன், வெளியேறினால் கடைசி மரியாதையாவது காப்பாற்றிக் கொள்ளலாம்.

பலமுறை கூறியும் அரசாங்கம் காதில் போட்டுக்கொள்ளவில்லையென்று தோழர் அந்தோணிப்பிள்ளை கூறியது, ராசிபுரம் விவசாயிகள்மாநாட்டில், திருச்சி ஜில்லாபோர்டு தலைவர் தோழர் ராஜா சிதம்பரம் ரெட்டியார் பேசியதை ஞாபகமூட்டுகிறது. முசிரிக்கு அருகில் காவிரி மீது பாலம் கட்டவேண்டுமென்று திருச்சியிலிருந்து தீர்மானம் அனுப்பினார். இத்தீர்மானத்தைத் திருச்சி ஜில்லாபோர்டுக்கே அனுப்பிவிட்டார்கள். தக்க

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

விடுதலை பெற்ற உடனேயே விலங்கிடவும்பட்டார்!

மலேயா சாம்பசிவத்திற்கு மறுபடியும் சிறைவாசம்!

மலேயாவில் அடக்குமுறை மனோவேகத்தில் பாய்கிறது

சிங்கப்பூர், ஏப். 2—

ஜோகூர் சுப்ரீம் கோர்டால், மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியதொழிற்சங்கத்தைச் சேர்ந்த தோழர் சாம்பசிவம், பிரிவுகவுன்சிலுக்கு முறையிட்டுக்கொண்டதன் விளைவாக நேற்றையத் தினம் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் விடுதலை செய்யப்பட்ட உடனேயே அவசரச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். சாம்பசிவம் விடுதலை பெற்ற மனிதராக இருந்த நேரம் இரண்டே நிமிஷம்தான்.

நேற்று, தோழர் சாம்பசிவம் விடுதலை செய்யப்பட்டு சிறையிலிருந்து வெளிவந்தார். அவர் சிறைக்கு வெளியில் சில அடிகள் எடுத்து வைப்பதற்குள், ஜோஹார் இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணன் அவரைப் பின் தொடர்ந்து அவரது தோளைத் தட்டினார். சாம்பசிவமும் கிருஷ்ணனும் மேலும் சில அடிகள் நடந்துசெல்வதற்குள், ஒரு சீன துப்பறியும் போலீஸ் அங்கு சாம்பசிவத்தின் கைகளில் விலங்கை மாட்டினார்.

சாம்பசிவம் தனக்கு விலங்கு பூட்டப்படுவது கண்டு புன்னகை செய்தார். அதே நேரத்தில் அங்கு காத்து நின்ற மோட்டாரில் அவர் ஏற்றப்பட்டார். கார் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்து சென்றது.

சாம்பசிவம் சிறையிலிருந்து வெளிவந்தபோது ஒரு காக்கி நிற அரைக்கால் சட்டையும், மேலே வெள்ளை சட்டையும் அணிந்திருந்தார். அவரது கையிலே ஒரு சிறு மூட்டை காணப்பட்டது. சிறைக்கு வெளியில் கூட்டம் எதுவும் இல்லை.

சாம்பசிவத்தின் தாயார், சகோதரிகள், மற்றுமுள்ள உறவினர்கள் பேராக் சமஸ்தானத்திலுள்ள சித்வான் என்னும் ஊரில் வசித்து வருகிறார்கள். சாம்பசிவத்தின் தந்தையார் இறந்துபோய் பல ஆண்டுகள் ஆகின்றன.

ஐந்துநாள் விக்கல்

லண்டன், ஏப். 3—

பதவியிலிருந்து விலகிய ஒரு கடற்படை அதிகாரி 5-நாட்களாக என்ன சிகிச்சை செய்தும் விடாமல் விக்கிக் கொண்டே இருந்ததால், கடைசியில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு குணப்படுத்தப்பட்டார்.

சென்னை சோஷலிஸ்டுகள் மாநாடு

சென்னை, ஏப். 2—

தோழர் ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டுள்ள சோஷலிஸ்டுக் கட்சியின் ஆண்டு மாநாடு, விரைவில் சென்னையில் கூட்டப்படுமெனத் தெரிகிறது.

ஒழிந்த வேளையில் பயங்கர இயக்கம்

சிங்கப்பூர், ஏப். 3—

மலேயா ஜெனில் கலகப்படையினருடன் சேர்ந்துகொள்ளும் ஓழிந்த வேளைப் பயங்கர இயக்கத்தினரும் பிரிட்டிஷ் அணுப்படைகளை எதிர்த்து வருவதாகத் தெரிகிறது.

இஸ்ரேலுடன் உறவாடினால் "கல்தா"

கெய்ரோ, ஏப். 3—

இஸ்ரேலுடன் தனிப்பட்டமுறையில் சமாதான ஏற்பாட்டையோ அல்லது அரசியல், ராணுவ, பொருளாதார உடன்படிக்கையையோ செய்துகொள்ளும் அரபு நாட்டை லீகிலிருந்து வெளியேற்றிவிடுவதென்று அரபுலீக் கௌன்ஸில் தீர்மானித்திருக்கிறது.

அந்த நாட்டின் விஷயமாக எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி அரபுலீக் அரசியல் கமிட்டி யோசனை கூறும்.

ஜெக்கில் உரேனியம் கிடைக்கிறது

லண்டன், ஏப். 3—

ஜெக்கோஸ்லாவியாவில்பிரோன் ஸெனுஸ்பாத், மாகிளன்பாத் இவ்விரு இடங்களிலும் உரேனியம் கிடைக்கிறது என்று தெரிந்திருந்தும், அதை யாரும் விஸிட்டர்கள் வரக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ரஷ்ய சுரங்க எஞ்ஜினீயர்கள் இங்கு ஏற்கனவேயே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

ஆஸ்லோ, ஏப். 3—

சில சொகுசு சாமான்களுக்கு சர்க்கார் கொடுத்து வந்த பணவுதவி நிறுத்தப்பட விருப்பதால் ரொட்டி, மாவு வெண்ணெ, காபி முதலியவைகளின் விலை மிகவும் ஏறும் என்று கூறப்படுகிறது.

பைஸாவில் 300 மாணவர்களின் அறப்போர்

பல்கலைக் கழகக் கட்டிடத்தைச்சுற்றி பலத்தப் போலீஸ் காவல்

ரோம், ஏப். 3—

பைஸா சர்வகலாசாலையைச் சேர்ந்த புராதனக் கட்டிடங்களின் மேல் மாடியில், சம்பளம் அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து சுமார் 300 மாணவர்கள் உள்ளிருந்து கொண்டே சத்யாக்கிரகம் செய்து வருகின்றனர்.

புரபஸர்கள், சர்வகலாசாலை சிப்பந்திகள் இவர்களை மாணவர்கள் வெளியேற்றி விட்டனர். இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கயிற்றில் கட்டிய கூடைகளில் வைத்து மேலே அனுப்பப்படுகிறதாம். இதற்காக பணம் பின்னர் தந்து விடுவதாக, மாணவர்கள் கூறியிருக்கிறார்களாம். போலீசார் வெளியே காவல் இருந்து வருகின்றனர்.

காந்த சக்திக்கு வசப்படாத கப்பல்

லண்டன், ஏப். 3—

யுத்தத்திற்கு முன்பு மரத்தினாலும், வெண்கலத்தினாலும் மட்டுமே கட்டப்பட்ட 770 டன் பிரிட்டிஷ் கப்பல் 'ரிஸர்ச்' இப்பொழுது விற்கப்பட்டு விடும் என்று தெரிகிறது. இக்கப்பல் கட்டுப்போது தாரம், இரும்பு, எஃகு முதலியவைகள் உபயோகப்படாததால் இவை அதில் இடம் பெறவில்லை.

ஸ்காட்லாந்தில் அம்மை நோய்

ஸ்காட்லாந்தில் அம்மை நோய் பரவிவருவதன் காரணமாக, விஸிட்டர்கள் யாரும் வரக்கூடாதென்று தடை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிளாஸ்கோ ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஒரு பெண் டாக்டர் அம்மை கண்டு மாண்டிருக்கிறார்,

தென்கிழக்கு ஆசியாவுக்கு உதவி

லண்டனிலும் வாஷிங்டனிலும் ஆலோசனை

லண்டன், ஏப். 3

தென்கிழக்கு ஆசியாவுக்கு உதவி அளிக்கும் விஷயமாக லண்டனிலும், வாஷிங்டனிலும் பூர்வாங்க ஆலோசனைகள் நடைபெறுவதாக நம்பப்படுகிறது.

தேசீய சீனாவுக்காக முன்பு 180,000,000 டாலர் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகை தலைவர் ட்ருமன் வசம் இருப்பதாகவும், அத்தொகையைத் தென்கிழக்கு ஆசியாவுக்கு உதவ யுனைடெட் ஸ்டேட்ஸ் அனுமதிக்கலாம் என்றும் வாஷிங்டன வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அட்லாண்டிக் ஒப்பந்தநாடுகளின் அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளும் மூவல்லரசு மாநாட்டில் பேசப்படலாம் என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு ஒப்பந்தநாடும் வாழ்க்கைத் தர அளவைக் குறைக்காமல் பாதுகாப்புக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்பதும் ஆலோசிக்கப்படும்.

மாலை மணி

சென்னை 4—4—50 செவ்வாய்க்கிழமை

பாசறை அமைகிறது பாரீர்! பங்கினைச் செலுத்திட வாரீர்

தலைமை நிலையக் கட்டடம்!

நானூற்றுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்களைக் கொண்ட நமது திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு, சென்னையில், தலைமை நிலையக் கட்டடம் கிடையாது.

சென்னையில் உள்ள கழகத் தோழர்களும் சரி, வெளியூர்களிலிருந்து வரும் கழகத்தோழர்களும் சரி, எவெரை எவெர் சந்தித்துப்பேச, இயக்க சம்பந்தமான அலுவல்களைப்பற்றிக் கலந்துரையாட, ஒரு தனி இடம் கிடையாது.

கடை வீதியிலே, பொதுக்கூட்டம் நடைபெறும் திடலிலே, சினிமாக் கொட்டகையிலே, சந்திப்பு, பேச்சு! தலைமைக் காரியாலயக் கட்டடம் தனியாக இல்லாதது பெருங் குறைமட்டுமல்ல, அன்றாடம் இயக்கப்பணிகளைக் கவனிக்கும் நிர்வாகப் பொறுப்பே ஏற்பட முடியாத சூழ்நிலையை உண்டாக்கி வைத்திருந்தது.

இயக்கக் காரியங்கள் அனைத்தும் இயக்க இதழ் நடைபெறும் இடத்திலிருந்தே கவனிக்கப்பட்டு வந்தன. அதனால் வேலை தடைப்பட்டு வந்ததுடன் முறைப்படி காரியங்களைச் செய்ய முடியாமலே போய்விட்டது ஜஸ்டிஸ் கட்சிக்கென, சென்னை மவுன்ட்ரோடில், மனோரம்மியமான மாளிகை இருந்தது—பறிபோயிற்று. பிறகு பெரியாரின் தலைமையிலே திராவிடர் கழகம் தழைக்கலாயிற்று—வசதி இருந்தும், அப்போதும் தலைமைக் காரியாலயம், தனியாக அமையவில்லை, 'விடுதலை' காரியாலயமோ, அல்லது பெரியார் மாளிகையோதான் கழகத் தோழர்கள் கூடிப் பேசும் இடமாகப் பயன் பட்டு வந்தது. இரண்டொரு சந்தர்ப்பங்களிலே கழகக் காரியாலயத்துக்கெனக் கட்டடங்கள் வாங்கப்பட்டன—பிறகு விற்கப்பட்டுவிட்டன.

சமுதாயத்தைத் திருத்தி அமைத்து, ஆட்சி முறையை மாற்றி அமைத்து திராவிடத்தின் தனிச்சிறப்பை நிலைநாட்டப் பாடுபடும் ஒரு மகத்தான இயக்கத்துக்கு, மாகாணத் தலைநகரிலே ஒரு காரியாலயம் கிடையாது என்றால், எவ்வளவு கேவலமாக இந்நிலை கருதப்படும் என்பதை எண்ணி எண்ணி ஏக்கமடையாதவர்கள் இல்லை. ஒவ்வொரு நாளும் இயக்க சம்பந்தமான கடிதங்கள் வந்து குவிகின்றன.—அவைகளை முறைப்படி கவனிக்க முடிவதில்லை.

கிளைக்கழக நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள், சொற்பொழிவாளர்களுக்குப் பயன்படும் வகையான குறிப்புகள், புள்ளி விவரங்கள் ஆகியவைகளைச் சேகரித்துவைத்து ஒழுங்குபடுத்தி வேலை நடைபெறச் செய்யவேண்டும். இதற்கு ஒரு தனிக காரியாலயம் மிக மிக முக்கியமானது.

இயக்கம் இன்று அடைந்திருக்கும் வளர்ச்சி உண்மையாகவே நாம் பூரிப்பும் பெருமையும் அடையவேண்டிய அளவும் தன்மையும் பொருந்தியது. இந்நிலையிலும் சென்னையில்தலைமைக் காரியாலயம் அமைக்காதிருப்பது மிகவும் வெட்கப்படவேண்டியதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புது அமைப்பைத் துவக்கி ஏழெட்டு திங்களாகின்றன. எனினும் பல ஆண்டுகளாக இருந்துவந்த குறைபாட்டினைக் களைந்தெறியும்நோக்கம்கொண்டு ஓரளவு வெற்றியும் பெற்று இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் தி. மு. கழக தலைமைக் காரியாலயம் அமைக்கத் தீர்மானித்து, ஆவன செய்துகொண்டிருக்கிறோம்.

தலைமைக் காரியாலயம் இயக்கத்தின் சொந்தக் கட்டடமாக அமைய இருக்கிறது.

அரண்மனைக்காரத் தெருவில் தலைமைக் காரியாலயத்துக்காக ஒரு கட்டடம் வாங்க, விலைபேசி முடித்தாகிவிட்டது. கட்டடத்தின் விலை 16000 ரூபாய்-முன்பணம் 3000 கொடுத்து ஒப்பந்தச் சீட்டு வாங்கியாகிவிட்டது.

இக்கட்டடத்தின் மேல் தளத்திலே, கழகக் காரியாலயத்துக்காக ஒரு கூடமும், வெளியூர்களிலிருந்து இயக்கத் தோழர்கள் சென்னை வரும்போது தங்கி இருந்து இயக்கத்தைக்கவனிக்க மூன்று அறைகளும் கட்டுவதெனவும், கட்டடத்தின் கீழ்பாகத்தில் இப்போது கிடைக்கும் வாடகைப் பணத்தைக்கொண்டு, காரியாலயப் பணிபுரிவோருக்கும், காரியாலயச் செலவுக்கும் ஈடு செய்வதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

செயற்குழுவினர் இந்தத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்—அதற்கான ஆதரவினைத் திரட்டித்தருவதாக வாக்களித்தனர்.

கட்டடம் வாங்கிப் புதுப்பிக்க, குறைந்தது 25000 ரூபாய் தேவை என்று தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே, தலைமைக் காரியாலய அமைப்புக்காக நடத்தப்பட்ட நாடகங்கள் மூலம் கிடைத்த தொகை, செலவு போக, 9000 ரூபாய் இருக்கிறது சென்னை மாவட்ட மாநாடு நடத்தியதில் மிச்சமான 3000 ரூபாயையும், சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினர். பெருந்தன்மையுடன் கட்டட நிதிக்காகத்தர இசைந்துள்ளனர். கணியூரில் நடைபெற்றக் கோவை மாவட்ட மாநாட்டிலே மீதமான தொகையில் ஆயிரமும், திருச்சி மாவட்ட மாநாட்டிலே மீதமான தொகையிலே ஆயிரமும், குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற தென்ஆற்காடு மாவட்ட மாநாட்டிலே மீதமான தொகையிலிருந்து ஆயிரமும் தர, செயற்குழுக் கூட்டத்திலே. அந்தந்த மாவட்ட உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டனர்.

ஆக, கட்டட நிதிக்காக இப்போது 15000 ரூபாய் தயாராக இருக்கிறது.

தேவை 25000—இருப்பது 15000.

எனவே, மேற்கொண்டு தேவைப்படும் பணத்துக்காக, கழகத் தோழர்கள் தத்தமது சக்திக்கேற்ற அளவு உதவி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

காரியாலயம் இல்லாத குறையைக்களையும் இந்த அரிய முயற்சியில் அனைவருக்கும் பங்கு இருக்க வேண்டும். 'நான் அனுப்பிய பணமும் சேர்ந்துதான், தலைமைக் காரியாலய கட்டடம் அமைந்தது' என்று உரிமையும் உவகையும் பூத்திடும் விதமாகப் பேசும் வாய்ப்பினை கழகத் தோழர்கள் அனைவரும் பெற்றாகவேண்டும்.

இந்தக் கட்டடத்திலே ஒரு 'அடி' அளவுக்காவது தான் தந்த 'பணம்' பயன் பட்டுத்தான் இருக்கும், என்ற மகிழ்ச்சியுடன் காரியாலயத்திலே உலவும் பெருமையை ஒவ்வொருவரும் பெறவேண்டும்.

தேவை 25000—இருப்பது 15000! இடையே உள்ள பள்ளம் பூர்த்தி செய்யப்படவேண்டும்—விரைவில்—உங்கள் அன்பின் மூலம்—காணிக்கை மூலம்.

காரியாலய மாடியைக்கூடுமானவரையிலே கவர்ச்சிகரமானதாக அமைக்க விருப்பம்.

மாடியிலே கொடிமரம் நாட்டி, நமது முன்னேற்றக் கழகக் கொடி கெம்பீரமாகப் பறக்கவும், அதைப் பார்த்துப் பூரித்தவண்ணம், காரியாலயத்திலே நுழைந்ததும், கூடத்திலே, பகுத்தறிவு பாசறைத் தலைவர்களின் உருவப் படங்களும், நாட்டு நிலையை விளக்கிடும் குறிப்புப் படங்களும், சுவையும் பயனும். தரும் விதமாகக் காட்சிதர வேண்டும்

காரியாலயம், வெறும் சந்திப்பு இடமாக மட்டுமின்றி, விஷய விளக்கம் பெறும் இடமாகவும் அமையவேண்டும். எனவே அங்கு சிறிய அளவிலேனும் சீரிய முறையினதான படிப்பகம் அமைக்கவேண்டும்.

காரியாலயத்திலே சென்று விசாரித்தால், கழக நடவடிக்கைகள் அவ்வளவும் திட்டவட்டமாகத் தெரியும் என்ற நம்பிக்கை பிறக்கும் விதமாக, பணியாற்ற வேண்டும். இதற்கெல்லாம் பெரும் செலவு இருக்கிறது.

எனவே இந்த நற்காரியத்தை வெற்றிகரமாக்கும் பொறுப்பினை ஏற்கும்படி அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கிளைக் கழகமும் குறைந்தது பத்து ரூபாயாவது கட்டட அமைப்புச் செலவுக்கென அனுப்பவேண்டுமென்று செயற்குழுவிலே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு என் வேண்டுகோளை விடுத்திருக்கிறேன், அன்பர்கள், கனவு நனவாகும் இக்காரியத்தை உடனடியாக வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்.

தேவை 25000—உள்ளது 15000 !!

இடைவெளியைப் பூர்த்தி செய்யவாருங்கள்— இன்றே வாருங்கள்—என்று அழைக்கிறேன்.

கழகக் கட்டடம் கட்டிட உங்கள் பங்கினைச் செலுத்த வாருங்கள்.

கிடைக்கும் உதவி ஏட்டிலே புள்ளிவிவர அளவிலே இருந்து விடாது—உருவான முறையில், உள்ளத்தில் உவகை பிறக்கும் முறையில், தலைமைக் காரியாலயக் கட்டடமாக காட்சிதரப் போகிறது.

வெட்ட வெளியிலேயே இருந்து வந்தோம் இதுநாள் வரை—இதோ காரியாலயக் கட்டட வாயலில் நிற்கிறோம்! மாடியில் செல்லவேண்டும்—மாடி அமைத்திட உமது உதவியை நாடி நிற்கிறேன். ஒவ்வொருவரின் உதவியையும் எதிர்பார்க்கிறேன்—விரைவில். ஆவன செய்ய முன் வாரீர்! தேவை 25000—உள்ளது 15000 !!

அன்பன்
அண்ணாதுரை.

டாக்டர் கேர்க்குத் தடை

டில்லியிலிருந்து வெளியேற்றப்பட்ட அகில இந்திய இந்து மகாசபைத் தலைவர் டாக்டர் என். பி. கேர் இன்று மாலை இங்குவந்து சேர்ந்தார். ஆனால் மத்திய பிரேச சர்க்காரால் அவருக்கு மேலும் ஒரு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அவர் கிழக்குப் பஞ்சாப் அகதிகள் பற்றி அவர் பொதுக்கூட்டங்களில் பேசவும், அறிக்கைகள் விடவும் கூடாதாம். நாகபுரியை விட்டும் வெளியேறக்கூடாதாம்.

பெல்ஜிய காங்கோ காலனி விஸ்தரிப்பு

பிரஸ்ஸல்ஸ், ஏப் 3—

லியோபால்ட் மன்னர் பதவிக்கு வருகிறாரா என்ற பிரச்னை தீர்க்கப்பட்டவுடன் பெல்ஜிய காங்கோ காலனி விஸ்தரிப்பு திட்டத்தை பெல்ஜிய சர்க்கார் மேற்கொள்ளும் எனத் தெரிகிறது. ரூ. 455 கோடி செலவில் இதற்காகத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை பெல்ஜிய மந்திரி சபை அங்கீகரித்துவிட்டது. பெல்ஜிய காங்கோவில் யுரேனியம் ஏதேஷ்டமாக அகப்படுகிறதாம்.

புற்று நோய் சிகிச்சைக்கு புதிய மருத்துவ விடுதி

சீக்கிரமே சென்னையில் எழுப்பப்படும்

சென்னை, ஏப். 3—

புற்று நோய் சிகிச்சை ஆஸ்பத்திரி சென்னையில் கட்டுவதற்கு ஒரு நல்ல இடத்தை இப்பொழுது தேடிக் கொண்டிருப்பதாகவும், அந்த இடத்தில் ஆஸ்பத்திரி கட்டுவதற்கு சர்க்கார் அனுமதிப்பார்களென்றும் இந்தியமாதர்களின் சழகத்தின் காரியதரிசி தோழியர் சி. விஸ்வநாதன் இன்று கூறினர்.

இந்திய மாதர்களின் சழகம் அகில இந்திய மாதர்களின் மாநாட்டின் ஒரு கிளை. சென்னையில் புற்றுநோயால் மக்கள், முக்கியமாக பெண்கள் துன்பப்படுகிறார்கள் என்றும், அதற்குச் சிகிச்சை அளிப்பதற்கு சென்னை மாகாணத்தில் ஆஸ்பத்திரி இல்லை என்றும், அதற்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு இப்பொழுது இச்சங்கத்தினர் பணம் வசூல் செய்து கொண்டிருக்கின்றனர் என்றும் தோழியர் விஸ்வநாதன் கூறினர்.

தோழியர் கமலா ரங்காச்சாரி புற்று நோய் ஆஸ்பத்திரியிலே இந்நோயைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு கட்டிடம் தன் சொந்த செலவில் கட்டுவதற்கு ஏற்றுக்கொண்டிருப்பதாக தோழியர் சி. விஸ்வநாதன் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—சென்ற ஒரு ஆண்டாக நாங்கள் இந்த ஆஸ்பத்திரி கட்டுவதற்குப் பணம் சேகரித்துக்கொண்டிருக்கிறோம். சென்னை மாகாணத்தில் அனேகப் பிரமுகர்கள் பணம் உதவி அளித்துள்ளார்.

சென்னை மாகாண நலன் நிதி ரூபாய் 50,000 கொடுப்பதாகவும், சென்னை முனிசிபல் கார்ப்பொரேஷன் ரூ 15,000 கட்டிட நிதிக்குத் தருவதாகவும் வாக்களித்துள்ளார்கள்.

பவநகர் மகாராணி புற்றுநோய் சிகிச்சை நிதிக்கு தலைவர். அவர் ரூ. 2,000 அளித்துள்ளார்.

நாங்கள் சென்னை மாகாணத்திலுள்ள அநேக தேவஸ்தானங்கள், ஜில்லாபோர்டுகளுக்கு அப்பீல் செய்துள்ளோம். இவ்விடங்களிலிருந்து எங்களுடைய நிதிக்குப் பணம் உதவி அளிக்கப்படுகிறது.

நாங்கள் காந்தி தேசிய ஞாபகார்த்த நிதி (புதுடில்லி)யின் செயலாளருக்கு ஒரு கடிதத்தில் ரூபாய் 10,00,000 புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு நன்கொடை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

சமீபத்தில் சென்னைக்கு தோழர் பாபு ராஜேந்திர பிரசாத் வந்திருந்த பொழுது எங்களுடைய வேண்டுகோளை மிகவும் சிரத்தையுடன் கவனிப்பதாகக் கூறினர்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார், இந்த நிதிக்கு ரூ. 2,000 அளித்துள்ளார்; இந்து பத்திரிகை ஆசிரியர் தோழர் கஸ்தூரி சீனிவாசன் ரூ. 5,000 நன்கொடை அளித்துள்ளார்.

ஜெமினி ஸ்டுடியோ அதிகாரி தோழர் எஸ். எஸ். வாசன் ரூபாய் 5,000 நன்கொடை அளித்துள்ளார் என்று முடிவில் தோழியர் விஸ்வநாதன் கூறினர்.